***DEPOSITION OF WITNESS***
***(Chapter XX of BNSS)***

***IN THE COURT OF ADDITIONAL MAHILA, TIRUVARUR.***
***CC.No. 108/2024 / – P.W. 1 (LW 1 )***

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குந்தவை நாச்சியார் | வயது | 27 |
| தகப்பனார் பெயர் | பாப்பையன் | ஜாதி | |
| தொழில் | பிசியோ தெரபி | மதம் | |
| ஊர் | புலிவலம் | தாலுக்கா | திருவாரூர் |

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 28.11.2025.*

**முதல் விசாரணை**

தற்போது மேற்கண்ட முகவரியில் எனது பெற்றோருடன் வசித்து அன்சாரி ஹாஸ்பிட்டல், பிஸ்மி மெடிக்கலில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 28.08.2022 ம் தேதி எனது தோழியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்காக பவித்திரமாணிக்கம் சென்றுவிட்டு எனது சொந்த ஊர் செல்வதற்காக புலிவலத்தில் இரவு 8.30 மணிக்கு பேருந்தில் இருந்து இறங்கி வீட்டிற்கு செல்வதற்காக நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது எனது பின்னால் யாரோ என்னை பின் தொடர்ந்து வருவதுபோல் இருந்தது. நான் திரும்பி பார்த்தபோது யாரும் இல்லை. நான் மீண்டும் சென்று கொண்டிருந்தபோது ஒருநபர் என்னை வாயை பொத்தி, கழுத்தை நெறித்தார். வாயை பொத்தி, எனது கழுத்தை நெறிக்கும்போதுதான் ஆஜர் எதிரியின் முகத்தை பார்த்தேன். ஆஜர் எதிரி எனது கழுத்தை நெறித்ததில் எனக்கு மூச்சு விட முடியவில்லை. நான் எனது பற்கலால் அவரது வலதுகையில் கடித்தேன். நான் அதன்பிறகு மூச்சு விடுவதை சீராக்கி கொண்டு சத்தம்

போட்டேன். நான் சத்தம் போடவும் ஊர்க்காரர்கள் பாக்கியராஜ் மற்றும் கருணாநிதி இருவரும் முதலில் வந்தார்கள். ஊர்க்காரர்களும் அதன் பிறகு வந்தார்கள். மேற்கண்ட பாக்கியராஜ் மற்றும் கருணாநிதி ஆகிய இருவரும் வந்த பிறகு தான் ஆஜர் எதிரி உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று எனக்கு கொலை மிரட்டல் விடுத்து சம்பவ இடத்திலிருந்து ஓடினார். ஆஜர் எதிரி நிறைய திருட்டு சம்பவங்களில் ஈடுபடுவார் என்று எங்கள் ஊரில் சொல்வார்கள். எனது அப்பா வேறு வழக்கிற்காக காவல்நிலையம் சென்றிருந்த நிலையில், ஆஜர் எதிரியை திருட்டு வழக்கிற்காக காவல்நிலையத்திற்கு அழைத்துவந்தபோது அங்கு எனது அப்பாவை பார்த்த ஆஜர் எதிரி எனது அப்பா தான் திருட்டு வழக்கு சம்மந்தமாக போலிசில் புகார் கொடுத்திருப்பார் என்று நினைத்து ஆஜர் எதிரி மேற்சொன்ன சம்பவத்தை செய்திருப்பார் என்று நினைக்கிறேன். சம்பவ இடத்திலிருந்து ஊர்க்காரர்கள் என்னை அழைத்து சென்று என்னை எனது வீட்டில் விட்டார்கள். ஆஜர் எதிரி எனது கழுத்தை நெறித்ததில் எனக்கு கழுத்து திருப்ப முடியவில்லை. வலி இருந்தது. சற்று நேரம் கழித்து தான் ஆஜர் எதிரி செய்கை குறித்து எனது அப்பாவிடம் சொன்னேன். எனது அப்பா என்னை கழுத்து வலி இருப்பதால் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். நான் மேற்கண்ட மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது திருவாரூர் தாலுக்கா காவல்நிலைய போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். போலிசாரிடம் நான் நடந்த சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்தேன். போலிசார் அதை எழுதிக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் கதிரியக்கியல் துறையில் டிப்ளமோ படித்துள்ளேன். என் தந்தை அரசியல் பிரமுகர் என்றால் சரிதான். அவருக்கு காவல்துறையில் நல்ல பழக்க வழக்கம் உள்ளது என்றால் சரிதான். என் சொந்த ஊர் தப்பளாம்புலியூர் என்றால் சரிதான். நான் எப்போது புலிவலத்திற்கு குடிபெயர்ந்தேன் என்றால் 10 ஆண்டுகள் ஆகிறது. ஆஜர் எதிரி நான் குடியிருந்து வரும் தெருவில் தான் வசித்து வருகிறார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் குடியிருந்து வரும் தெருவில் முதல் வீடு என் வீடு என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து 4 வீடு தள்ளி தான் ஆஜர் எதிரியின் வீடு என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

ஆஜர் எதிரி மன்னார்குடி ஆண் அழகன் போட்டியில் மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பிடித்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி நிகழ்ச்சி பிறகு நான் ஆஜர் எதிரியை காதலித்தேன் என்றால் தவறு. நானும், ஆஜர் எதிரியும் 4 ஆண்டுகளாக காதலித்து வந்தோம் என்றால் அது எல்லாம் கிடையாது. இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்னர் நானும், ஆஜர் எதிரியும் நாகப்பட்டினம் சென்றபோது கானூர் செக் போஸ்ட் – ல் என்னையும், ஆஜர் எதிரியையும் பார்த்த போலிசார் என் தந்தையை பற்றி விபரம் தெரிந்த காரணத்தால் எனக்கு அறிவுரை சொல்லி அனுப்பி விட்டார்கள் என்றால் அவ்வாறு இல்லை. மேற்படி நிகழ்வுக்கு பிறகு நான் ஆஜர் எதிரியுடன் பழகுவதை நிறுத்தி விட்டேன் என்றால் தவறு.

நான் சம்பவம் நடந்தது குறித்து எப்போது புகார் அளித்தேன் என்றால் நான் சம்பவம் நடந்த அன்றே மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன்.

நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் சிகிச்சையின்போது நிதானத்தில் இருந்தேனா என்றால் நிதானமாகத்தான் இருந்தேன். புலிவலம் என்பது பெரிய கிராமம் என்றால் சரிதான். என்னை மருத்துவமனையில் விசாரணை செய்த போலிசார் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆண் போலிசார் விசாரித்தார். மருத்துவமனையில் என்னை விசாரித்ததற்கு பிறகு போலிசார் என்னை மீண்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை.

போலிசார் என்னை விசாரணை செய்தபோது எத்தனை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இரண்டு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். ஒன்று எழுதப்பட்ட பேப்பர், மற்றொன்று எழுதப்படாத பேப்பர் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கியபோது நான் பதட்டமாக இருந்தேனா என்றால் சரிதான். கழுத்து நெறிக்கப்பட்டதால் வலியுடன் இருந்தேன். நான் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்த பிறகு மேற்படி வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். எத்தனை பக்கத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு பக்கங்களில் எழுதியிருந்தது. இரண்டு பக்கங்களிலும் கையொப்பம் செய்தேன்.

என் முதல் விசாரணையில் என்னை யாரோ பின் தொடர்ந்து வந்ததாகவும், நான் திரும்பி பார்த்தபோது யாரும் இல்லாமல் இருந்ததாகவும், திடீரென்று பின்புறமாக என்னை ஒருவர் வாயை பொத்தி, கழுத்தை நெறித்ததாகவும், நான் அவரது கையை கடித்ததாகவும், அப்போது தான் ஆஜர் எதிரியின் முகத்தை பார்த்ததாகவும், தொடர்ந்து நான் போட்ட சத்தத்தினால் ஊர்க்காரர்கள் வந்ததாகவும், அதன்பிறகு ஆஜர் எதிரி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாகவும், சம்பவத்தினால் எனக்கு மூச்சு

விட சிரமமாக இருப்பதாகவும், அதன் காரணமாக சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் என்னை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். நானும், ஆஜர் எதிரியும் காதலித்து வந்திருந்து பிறகு காணூர் செக் போஸ்ட்டில் என்னை போலிசார் அறிவுறுத்திய பின்னர் அதுகுறித்து என் தகப்பனாருக்கு தெரிய வந்தும், நானும், ஆஜர் எதிரியிடம் பழகாமல் இருந்து வந்தும், என் மூலமாக என் தகப்பனார் அவரது செல்வாக்கை பயன்படுத்தி பொய் புகார் கொடுக்க செய்துள்ளார் என்றாலும் தவறு. என் முதல் விசாரணையில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும், ஆஜர் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் தவறு. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளிலிருந்து இரண்டு நாட்களுக்கு பிறகு தான் நான் சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றேன் என்றால் சம்பவத்தன்றே நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று விட்டேன்.

(ஒம்/– S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XX of BNSS)***

***IN THE COURT OF ADDITIONAL MAHILA, TIRUVARUR.***
***CC.No. 108/2024 / – P.W. 2 (LW 3)***

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருணாநிதி | வயது | 55 |
| தகப்பனார் பெயர் | ராசு | ஜாதி | |
| தொழில் | கொத்தனார் | மதம் | |
| ஊர் | புலிவலம் | தாலுக்கா | திருவாரூர் |

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 28.11.2025.*

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறார். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். இன்றிலிருந்து சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 8.30 மணியளவில் புலிவலம் பெருமாள் கோவிலிருந்து எங்கள் வீட்டிற்கு செல்வதற்காக நானும், பாக்கியராஜ் என்பவரும் சென்று கொண்டிருந்தோம். எங்கள் வீட்டிற்கு செல்லும் வழியில் உள்ள குளத்திற்கு அருகில் உள்ள பாலத்திலிருந்து சத்தம் கேட்டது. நானும், பாக்கியராஜூம் சத்தம் வந்த திசை நோக்கி சென்று பார்த்தபோது ஆயாம்மா என்பவரது வீட்டிற்கு அருகில் ஆஜர் எதிரி அ.சா.1ன் கழுத்தை நெறித்து கொண்டிருந்ததை பார்த்தோம். நானும், பாக்கியராஜும் விடுடா விடுடா என்று சத்தம் போட்டோம். நாங்கள் சத்தம் போடவும் ஆஜர் எதிரி சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார். அ.சா.1 ஐ நானும், பாக்கியராஜூம்

எனது வீட்டிற்கு அழைத்து சென்று அவருக்கு தண்ணீர் கொடுத்தோம். அவரை அவரது வீட்டில் கொண்டு விடுவதாக கேட்டபோது அ.சா.1 தானே சென்று விடுவதாக சொன்னார். நானும், பாக்கியராஜும் அ.சா. 1 ஐ அவரது வீட்டிற்கு அழைத்து சென்றபோது எதிர்புறம் அ.சா.1ன் தாயார் வந்தவரிடம் அ.சா.1 ஐ ஒப்படைத்து நாங்கள் இருவரும் வீட்டிற்கு வந்து விட்டோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் எந்த தேதியில், எந்த நேரத்தில் நடந்தது என்றால் 3 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. தேதி நினைவில்லை. நேரம் சுமார் இரவு 8.30 மணி இருக்கும். என்னை அ.சா.1 ன் தகப்பனார் தான் இந்த நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். அப்போது அங்கு யார் வந்தார்கள், யார் போனார்கள், என்ன நடந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் தெரியாது. ஆஜர் எதிரி அ.சா.1ன் கழுத்தை நெறித்துக் கொண்டிருந்தார். எவ்வளவு துாரத்திலிருந்து நான் பார்த்தேன் என்றால் 50 மீட்டர் துாரத்தில் பார்த்தேன். நான் ஆஜர் எதிரி அ.சா.1 ஐ கழுத்தை நெறித்ததை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

ஆஜர் எதிரியும், அ.சா.1ம் ஒருவரை ஒருவர் காதலித்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியும், அ.சா.1ம் காதலித்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அ.சா.1 க்கு கெட்ட பெயர் ஏற்பட கூடாது என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சம்பவ நேரத்தில் நான் செல்லவில்லை என்றாலும், அதன் காரணமாகவே என்னால் எந்த

இடத்தில் நடந்தது என்பது குறித்து குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும், ஆஜர் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

(ஓம்/– S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.